**விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2010**

---

## 1 நிதிசார்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப்பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படக்கூடிய தாக்கங்களைத்தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 ஓய்வூதிய நலத்திட்டத்தின் தொடர்ந்தியங்குதல்

திட்டத்தின் விவசாயிகள் ஓய்வூதிய நிதிய மீதியானது கீழே காட்டப்பட்டவாறு 2005 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,309.3 மில்லியனிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 319.5 மில்லியன் எதிர்மறையான மீதிக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகளின்படி, சகல நிதிகளும் 2010 ஆகஸ்ட் மாத இறுதியில் தீர்ந்துபோய்விட்டதுடன் அதன்பின்னர் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் சபையில் இருக்கின்ற வேறு நிதிகளிலிருந்து குறுகியயகாலக் கடன்களைளப் பெறுவதன்மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகவே விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் தங்கியிருத்தல் அரசாங்க மானியங்களில் மொத்தமாகத் தங்கியிருக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களின்படி, நிதியத்தின் எதிர்கால பொறுப்பு ரூபா 29.5 பில்லியனாகும்..

| ஆண்டு | நிதியத்தின் மீதி |
|---|---|
| | ரூபா மில் |
| 2005 | 2,309.3 |
| 2006 | 2,003.7 |
| 2007 | 1,639.8 |
| 2008 | 1,404.8 |
| 2009 | 663.8 |
| 2010 | (319.5) |

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல 3 இன்படி மீளாய்வாண்டிற்கான வருமானக் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்வுக் கொள்கை மாற்றம் தொடர்பான அவசியமான சீராக்கங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இல 10 இல் குகறிப்பிடப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இல 24 இன்படி ஒழுங்குமுறை அடிப்படையில் தொடர்புயை கிரயங்களை ஈடுசெய்யும் விதத்தில் அவற்றுக்குப் பொருத்தமான காலத்திற்குப் மூலதனச் செலவுகளிற்கான அரசாங்க மானியங்கள் வருமானமாக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். திட்டத்தால் இத்தேவைப்பாடு இணங்கியிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 36 மற்றும் 42 இன்படி நிதிக்கூற்றுக்களில் எதிர்கால ஓய்வூதிய நலன்களிற்காக போதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 16 மற்றும் 42 இன்படி தகைமையுடைய அளவீட்டைப் பயன்படுத்தியோ அல்லது பணிக்கொடை சூத்திர முறையைப் பயன்படுத்தியோ பிந்திய ஊழிய

நன்மைக்கான கடப்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் மேற்குறித்த தேவைப்பாடுகளிற்கிணங்க, பணிக் கொடைப் பொறுப்பு கணிப்பிடப்பட்டிருக்கவிலல்லை.

**1.2.3 கணக்கீட்டுக் குறைபாடு**

1992 முதல் 2007 ஆம் ஆண்டு வரை மாற்றப்படாதவையாக இருந்த, மூன்று வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்ட்ட 117 காசோலைகள் தொடர்பிலான ரூபா 1,179,624 தொகையான தேறாத வைப்புக்களின் பெறுமதியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

**1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 125,079,264 தொகையான ஒன்பது பெறப்பட வேண்டிய கணக்குகளின் மீதிகள் மூன்று ஆண்டுகளை விஞ்சிய காலமாக அறவிடப்படாமல் இருந்தன.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காட்டப்பட்ட ரூபா 8,306,122 தொகையான பெறவேண்டிய கணக்குகளில் ரூபா 2,328,439 அல்லது 28 சதவீதம் மாத்திரமே 2011 ஏப்ரல் 21 வரை தொடர்புபட்ட பகுதியினரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) ரூபா 1,682,031 கூட்டுமொத்த தொகையான செலுத்தப்படவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் நீண்டகாலமாகத் தீர்க்கப்பட்டிருக்க வில்லை.

**1.2.5 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

2010 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின்படி, வருமானக் கூற்றில் சாட்டுதல் செய்யப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புகள் முறையே ரூபா 4,789,305 மற்றும் ரூபா 1,132,352 ஆக இருந்தன ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புகளிற்காக கவனத்திற்கொள்ளப்பட்ட மொத்தச் சம்பளம் ரூபா 39,910,878 ஆகவும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக இது ரூபா 37,745,071 ஆகவும் இருந்தது. சகல ஊழியர்களும் குறிப்பிடப்பட்ட வீதங்களில் 2 நிதியங்களிற்கும் பங்களிப்புச் செய்யப்பட தகுதியுடைய

போதிலும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புகளின் கணிப்பீட்டிற்காக கவனத்திற்கொள்ளப்பட்ட சம்பளம் ரூபா 2,165,807 ஆன தொகையால் குறைவாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. வித்தியாசத்தற்கான காரணம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்ட்டிருக்க வில்லை.

**1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 395 இன்படி, இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பில் வங்கிக் கணக்கிணக்கக் கூறடறுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஒக்டோபர் 5 ஆந் திகதிய 6 ஆம் இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட கொள்வனவு வழிகாட்டல் - 2006 இன்படி, கேள்வி நடைமுறையைப் பின்பற்றாமல் திட்டத்திற்கான புதிய மென்பொருளின் நிகழ்ச்சித்திட்டத்திற்காக கொழும்பு பல்கலைக்கழக கணனி பாடசாலைக்கு (யூசீஎஸ்சீ) ரூபா 1,475,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 984,711,579 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 741,312,102 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் அது நிதிசார் விளைவுகளில் ரூபா 243,399,477 அல்லது 32.8 சதவீதமான மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. விபரங்களள் கீழே தரப்படுகின்றன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | முரண் |
|---|---|---|---|
| | 2010 | 2009 | |
| | ரூபா | ரூபா | சதவீதம் |
| மொத்த வருமானம் | 210,398,099 | 362,467,131 | (41.9) |
| மொத்தச் செலவினம் | 1,195,109,678 | 1,103,779,233 | 8.3 |
| ஆண்டிற்கான பற்றாக்குறை | (984,711,579) | (741,312,102) | (32.8) |

### 4.1.2 நிதிசார் விளைவுகள் மற்றும் நிதி நிலைமை என்பவற்றின் பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

(அ) அரசாங்க மானியங்களிலிருந்து நிர்வாகச் செலவினத்தின் ஒரு பகுதி செய்யப்பட்டிருந்த போதிலும் நிதியத்தின் நிதி நிலைமை ஆபத்தான நிலைமையில் தொடர்ந்திருந்தது. திட்டத்தின் நிதிசார் விளைவுகள் கீழே காட்டப்பட்டவாறு 2002 இல் ரூபா 214 மில்லியன் மிகையிலிருந்து 2010 இல் ரூபா 985 மில்லியன் பற்றாக்குறைக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் சாத்தியத்தன்மை பற்றி ஆபத்தான நிச்சயமற்ற தன்மையிலுள்ளது.

| விபரங்கள் | ஆண்டு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 ரூபா மில் | 2009 ரூபா மில் | 2008 ரூபா மில் | 2007 ரூபா மில் | 2006 ரூபா மில் | 2005 ரூபா மில் | 2004 ரூபா மில் | 2003 ரூபா மில் | 2002 ரூபா மில் |
| மொத்த வருமானம் | 210 | 362 | 716 | 527 | 530 | 382 | 413 | 403 | 481 |
| மொத்தச் செலவினம் | (1,195) | (1,103) | (951) | (891) | (744) | (545) | (460) | (351) | (267) |
| நிதியத்திற்கு மாற்றப்பட்ட மிகை/ (பற்றாக்குறை) | (985) | (741) | (235) | (364) | (214) | (163) | (47) | 52 | 214 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய 5 ஆண்டுகளிற்காக திட்டத்தின் விவசாயிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த பங்களிப்புகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **பங்களிப்புகள்** | **ஓய்வூதியக் கொடுப்பனவு** |
|---|---|---|
| | **ரூபா மில்** | **ரூபா மில்** |
| 2005 | 161.8 | 415.2 |
| 2006 | 214.7 | 550.3 |
| 2007 | 222.6 | 685.7 |
| 2008 | 163.1 | 809.1 |
| 2009 | 148.7 | 955.6 |
| 2010 | 136.7 | 1,044.7 |

(இ) திட்டத்தின் மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் 2005 இல் இருந்த ரூபா 2,529.2 மில்லியனிலிருந்து 2010 ஆம் ஆண்டில் ரூபா 295.3 மில்லியன் அல்லது 111.7 சதவீதமான எதிர்மறை மீதிக்கு குறைந்திருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **மூலதனம் மற்றும் ஒதுக்கங்களின் மீதி** |
|---|---|
| | **ரூபா மில்** |
| 2005 | 2,529.2 |
| 2006 | 2,247.5 |
| 2007 | 1,911.1 |
| 2008 | 1,427.8 |
| 2009 | 688.0 |
| 2010 | (295.3) |

(ஈ) முதலீடுகள் 2006 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்த அதேநேரம் முதலீடுகளிலிருந்தான வருமானமும் கீழே காட்டப்பட்டவாறு 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பாரியளவு வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

| ஆண்டு | முதலீடுகள் | முதலீட்டு வருமானம் |
|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் |
| 2005 | 2,488.6 | 198.9 |
| 2006 | 1,985.3 | 264.4 |
| 2007 | 1,656.0 | 251.3 |
| 2008 | 1,256.1 | 243.9 |
| 2009 | 582.2 | 138.9 |
| 2010 | 3.5 | 14.9 |

மேற்குறித்த தகவலின்படி, முதலீடுகள் 2005 இல் இருந்த ரூபா 2,488.6 மில்லியனிலிருந்து 2010 ஆம் ஆண்டில் ரூபா 3.5 மில்லியன் அல்லது 99.9 சதவீதம் குறைவடைந்திருந்ததுடன் வட்டி வருமானம் 2006 இல் இருந்த ரூபா 264.4 மில்லியனிலிருந்து 2010 ஆம் ஆண்டில் ரூபா 14.9 மில்லியன் அல்லது 94.4 சதவீதமாக குறைவடைந்திருந்தது.

## 2.2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காக 10,000 பதிவுசெய்யப்பட்டவர்களிடமிருந்து ரூபா 55,478,000 தொகையான பங்களிப்புகள் இலக்கிடப்பட்டிருந்த போதிலும், சேகரிக்கப்பட்ட உள்ளபடியான பங்களிப்புகள் 4,902 பங்களிப்பாளர்களிடமிருந்து ரூபா 11,459,433 ஆகும். இதன்படி, உள்ளபடியான நிதி எய்தல்கள் 20.6 சதவீதமானதுடன் உள்ளபடியான பதிவுசெய்யப்பட்டோர் 49 சதவீதமாக இருந்தது. 6 மாவட்டங்களில் எய்தல்களின் முன்னேற்றம் 10 சதவீதத்திற்கு குறைவாக இருந்தது.

### 2.2.2 செயற்திட்டங்களின் அமுலாக்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டத்தின் ஆளுக்குரிய பங்களிப்பாளர்களின் கணக்குகளை கணனி மயப்படுத்துவதற்காக 1987 இலிருந்து ரூபா 21.5 மில்லியனான தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் திட்டம் தாபித்ததிலிருந்து 22 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகள் நாளதுவரையாக்கப்பட்டிக்கவில்லை. அதேநேரம் தனித்தனி பங்களிப்பாளர்களின் அடுத்துவரும் தவணைப்பணங்கள் கணனிமயப்படுத்தப்பட்டு நாளது

வரையாக்கப்பட்டிருக்கவில்லை. திட்டமானது விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டத்திற்கு பங்களிப்புக்களின் கொடுப்பனவிற்கு தகைமைபெற்ற பங்களிப்பாளர்களை நிர்ணயிப்பதற்கு போதிய தகவல்களை கொண்டிருக்கவில்லை. மாவட்ட அலுவலகங்களிலும் கூட பங்களிப்பாளர்களின் தரவுகளை கணனிமயப்படுத்துதல் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டத்திற்கான புதிய கணனிமயப்படுத்தல் முறைமையொன்றை விருத்தி செய்வதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு வரை அதில் ஏற்பட்ட செலவினம் ரூபா 5,479,120 ஆகும். உடன்படிக்கையின்படி, செயற்திட்டம் ஆறு மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும், ஆனால், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் கூட அது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நிதிசார் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின்போது திட்டத்தைவிட்டு விலகிய பங்களிப்பாளர்களில் எண்ணிக்கை மற்றும் இரண்டாவது மற்றும் அதன் பின்னரான தவணைக் கட்டணங்களின்போது விட்டுச்சென்றோர் எண்ணிக்கை என்பன தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 செப்டெம்பர் 26 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின்படி, மாவில் ஆறு அணைக்கட்டு மூடியதன் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளிற்காக விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூக நலன்புரித் திட்டதிலிருந்து ரூபா 176 மில்லியனை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 194,169,155 தொகையான முதலீடுகள் இந்த நோக்கத்திற்காக கழிவுக்குமாற்றப்பட்டதுடன் ரூபா 120,198,639 ஆன தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட இழப்பீடு திறைசேரியிலிருந்து பெறவேண்டியவையாக தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 2,791,679 பெறுமதியான நாற்பத்து எட்டுக் காசோலைகள் மற்றும் ரூபா 7,152,249 பெறுமதியான வங்கி வரைவுகள் என்பன திட்டத்தினை நிர்வகித்த கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் 2 பணிப்பாளர்கள் மற்றும் ஒரு உதவிப் பணிப்பாளர் என்போரால் 2008 ஆம் ஆண்டில் மோசடியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததென சபையானது எனக்கு அறிவித்திருந்தது.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால், அது பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் பயனுள்ள ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதைக் காட்டுகிறது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக்காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை

(ஆ) நிதிசார் முகாமைத்துவம்

(இ) ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் செலுத்தப்படாத ஓய்வூதியங்களும்